**<u>2025 நவம்பர் மாதம் 05 – ஆம் தேதி புதன்கிழமை</u>**

**<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>**

**<u>S.C. நெம்பர் : 124/2024</u>**

| | | | |
|---|---|---|---|
| S.C. No: 124/2024 | பெயர்: யோகமலர்<br>க/பெ.முருகேசன் | PW2 | 05.11.2025 |

**<u>சாட்சி மனுவின் பெயரில் அழைக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு 1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)

16.10.2023 ம் தேதி நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் பற்றிய சங்கதிகள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் குறித்து நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் போலீசார் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 05.11.2025 ம் தேதியன்று சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR
Digitally signed by SANKAR
Date: 2025.11.05 18:16:21 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
05.11.2025

**<u>2025 நவம்பர் மாதம் 05 – ஆம் தேதி புதன்கிழமை</u>**

**<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>**

**<u>S.C. நெம்பர் : 124/2024</u>**

| | | | |
|---|---|---|---|
| S.C. No: 124/2024 | பெயர்: சின்னச்சாமி<br>த/பெ.பால்சாமி | PW5 | 05.11.2025 |

**<u>சாட்சி மனுவின் பெயரில் அழைக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)

1 வது எதிரியிடமிருந்து போலீசார் வாக்குமூலம் வாங்கியதாக என்னிடம் கையொப்பம் பெற்றது காவல்நிலையத்தில் தான் என்றால் சரிதான். இருச்சக்கர வாகனத்திலிருந்து அரிவாள் மற்றும் வாகனத்தை கைப்பற்றியதாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் யாவும் போலீசாரால் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆகியவற்றில் உள்ள கையொப்பங்கள் காவல்நிலையத்தில் வைத்து தான் வாங்கினார்கள் என்றால் சரிதான். போலீசார் என்னை எப்போதும் விசாரிக்கவில்லை என்றும், காவல்நிலையத்தில் வைத்து தான் விசாரணை செய்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் போலீசார் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1 வது எதிரி எனது ஊர் என்பதால் போலீசார் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றும், 2 மற்றும் 3 எதிரிகளை எனக்கு யார் எனறே எனக்கு தெரியாது என்றால் 1 வது எதிரி எனது நண்பர், 2, 3

எதிரிகளை எனக்கு தெரியாது. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், போலீசார் வேண்டுமென்றே என்னை சாட்சியாக போட்டுவிட்டார்கள் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 05.11.2025 ம் தேதியன்று சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.11.05 18:16:30 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
05.11.2025